2–2–81 (திங்கட் கிழமை)	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது 1979–80 ஆம் ஆண்டிற்கா துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்-தொடர்ச்சி.
3-2-1981 (செவ்வாய்க்கிழமை)	பேரவைக் கூட்டம் இல்லை.
4–2–1981 (புதன்கிழமை)	அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்.
5–2–1981 (வியாழக்கிழமை)	
6-2-1981 (வெள்ளிக்கிழமை)	1980-81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும், அதற்கான நிதி ஒதுக்க சட்டமுன் வடிவு அறிமுகம் செய்தலும்.
7-2-1981 (சனிக்கிழமை)	அரசு அலுவல்கள்.
8-2-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
9-2-1981 (திங்கட்கிழமை)	(1) நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். (2) இதர அரசு அலுவல்கள்.
(10-2-1981) (செவ்வாய்க்கிழமை)	அரசு அலுவல்கள்.
	பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 29-1-1981 ஆம் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

162. தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்தின் 1971-72 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. (ஆங்கிலம், தமிழ்) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு–வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 4/1971) 47 ஆவது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

163. ஊராட்சிகள் விதிக்கத்தக்க வீட்டு வரி தொடர்பான விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 22-12-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1974 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

164. தமிழ்நாடு அலுவலகப் பணியாளர் தொகுதியிலுள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் பதவியினை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக வரம்பெல்லையிலிருந்து நீக்குவதற்கென்று, தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு—நிர்வாக சீர்திருத்தத் துறையின் (பணியாளர் அமைப்பு—எம்) 25-11-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1162 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

165. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 22-7-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1371 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் எண், 29/1974) 57 (2) ஆவது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

166. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளின் 16 (ஆ) ஒழுங்குமுறை விதியின்படி, தேர்வாணைக்கழக வரம்பெல்லையிலிருந்து, தமிழ்நாடு அலுவலகப் பணியிலுள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் பதவிகளை நீக்குவது குறித்து பணியாளர் அமைப்பு—நிர்வாக சீர்திருத்தத் துறையின் (பணியாளர் அமைப்பு—எம்) 25-11-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1161 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

* 16. 1980—81 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக்கோரிக்கைகளும் விரிவான]துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

*17. 1980-81 ஆம் ஆண்டில் துணை மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

@18. 1980-81 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்.)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE LIBR
12 AUG 1981
MADRAS